# ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்கள்! அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்!



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (15.07.2025) திருவண்ணாமலை வட்டம், பழையனூர் ஊராட்சியில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை தொடங்கி வைத்து பல்வேறு துறைகளின் சார்பாக பயனாளிகளுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று (15.07.2025) தொடங்கி வைக்கப்பட்டுள்ள உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமினை, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் ஜி.அரவிந்த், இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத் மற்றும் அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலகர்கள் உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு ஊராட்சி ஒன்றியம் வேப்பூரில்நடந்த திட்டமுகாமில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மனுக்கள் பதிவு செய்யப்படுவதை பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட ஆட்சியர் ஜெ.யு. சந்திரகலா, மாவட்ட ஊராட்சிகுழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் புவனேஸ்வரி, துணைத் தலைவர் ஸ்ரீமதி, ஊராட்சி மன்ற தலைவர் ராமலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், ஆதனக்குறிச்சி அம்மன் திருமண மண்டபத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை துவக்கி வைத்து பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.ரெத்தினசாமி.கலந்துகொண்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.07.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி, திருவெறும்பூர் வட்டம், நவல்பட்டு பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், வருவாய் கோட்டாட்சியர் அருள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம், திருச்சுழி ஊராட்சி ஒன்றியம், ஆலடிப்பட்டி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், நடைபெற்ற முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.நவாஸ்கனி முன்னிலையில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (15.07.2025) தொடங்கி வைத்து, பொதுமக்களிடம் இருந்து மனுக்கள் பெறப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்டு வருவதை பார்வையிட்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நேற்று (15.07.2025) தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெறும் இடங்களில் ஒன்றான சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலத்தில் நடைபெற்ற முகாமில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மாற்றுத்திறனாளி சனாவுல்லா இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வேண்டி கோரிக்கை மனு அளித்ததன் அடிப்படையில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாற்றுத்திறனாளிக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை, நேற்று (15.07.2025) கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அடையாறு மண்டலம், வார்டு–168, சைதாப்பேட்டை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினைப் பார்வையிட்டு, மக்கள் வழங்கிய மனுக்களுக்கு தீர்வுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், மண்டலக்குழுத் தலைவர் திரு.ஆர்.துரைராஜ், மண்டல அலுவலர் (பொ) ஹார்டின் ரோஸ ரியோ, மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்கள் நேற்று (15.07.2025) ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை, கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து (15.7.2025) மண்டலம்.6. ஸ்ட்ராஹன்ஸ் சாலையில் உள்ள திருவிகநகர் மாநகராட்சி மண்டல அலுவலக வளாகத்தில் பல்வேறு அரசு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் குறைகளை கேட்டறிந்து கலந்துரையாடினார். இந்திகழ்வின்போது மேயர் ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி புளியந்தோப்பு காவல் துணை ஆணையாளர் கே.முத்துகுமார் மண்டலக் குழுத்தலைவர் சரிதா மகேஷ்குமார். மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், தாவூத்சி யோகபிரியா. அமுதா, ஸ்ரீதணி, யுனிதவதி எத்திராஜன், தமிழ்ச்செல்வி, சரவணன் அம்பேத்வளவன், மண்டல அலுவலர் சரவணன், செயற்பொறியாளர் சதீஷ் அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட பாலகிளாவா ஜெயின் மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, முன்னிலையில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை நேற்று (15.07.2025) பெற்றுக் கொண்டார். உடன் குன்னூர் நகர்மன்ற தலைவர் திருமதி சுசீலா, துணைத்தலைவர் வாசிம்ராஜா உட்பட பலர் உள்ளனர்.